**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தனியாள் பேசும் மொழியை எவ்வாறு அழைப்பர்?
2. பொருள்வேறுபாடு எதையும் உணர்த்தாமல் இடத்தால் மட்டும் வேறுபடும் ஒலிக்கு என்ன பெயர்?
3. 'கொல்சி' என்பது எந்த நகரைக் குறிக்கும்?
4. பலுசிஸ்தான் பகுதியில் பேசப்படும் திராவிட மொழி எது?
5. சொல்லியலை மொழியியலாளர்கள் எவ்வாறு அழைப்பர்?
6. நுனி நாவும் நுனி அண்ணமும் பொருந்தப் பிறக்கும் எழுத்துகள் யாவை?
7. வினைச்சொல்லின் வகைகளை எழுதுக.
8. சோழர் காலத்தில் தோன்றிய இலக்கண நூல் எது?
9. சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கப்படும் காலம் எது?
10. கல்வெட்டுகளில் வடமொழி எழுத்துகள் எந்த வடிவில் எழுதப்பட்டன?
11. 'கின்று' என்ற நிகழ்கால இடைநிலை முதன்முதலில் எந்த இலக்கியத்தில் வந்துள்ளது?
12. ஓவிய எழுத்துமுறை கொண்ட மொழிகள் எவை?
13. கிரந்த எழுத்துகள் இரண்டினை எழுதுக.
14. சென்னைப் பிரம்ம சமாஜம் வெளியிட்ட இதழின் பெயர் என்ன?
15. வானொலியானது எப்பண்பை அடிப்படையாகக் கொண்ட மின்னணு ஊடகம்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. ஒட்டுமொழி என்றால் என்ன?
2. அகச்சந்தி–புறச்சந்தி வேறுபடுத்துக.
3. குகைக் கல்வெட்டுகளின் தோற்றத்தை விவரி.
4. பால் காட்டும் புதிய சொற்கள் யாவை?
5. இரட்டைப் பன்மை விகுதிகள் பல்லவர் காலத்தில் பயின்று வந்துள்ள விதத்தைக் குறிப்பிடுக.
6. உரைநடையின் தோற்றம் குறித்து எழுதுக.
7. பேச்சுத் தமிழில் நிகழும் உயிரொலி மாற்றங்களைப் புலப்படுத்துக.
8. கடன் வாங்கல் – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்ச் சொற்களின் அமைப்பும் வகைப்பாடும் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களின் பயன்பாட்டைத் தொகுத்துரைக்க.

2. (அ) மொழியிடை மெய்ம்மயக்கங்கள் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாயக்கர் கால இலக்கிய இலக்கணங்களைத் தொகுத்துதெழுதுக.

3. (அ) மொழி நடையின் தன்மைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தமிழில் பிறமொழிச் சொற்கள் புகுந்துள்ள நிலைகளைப் புலப்படுத்துக.

***